சுருக்கம்

சமூகநலம் – ஊனமுற்றோர் நலம்– 2008–2009ஆம் ஆண்டுக்கான பகுதி II திட்டம் – தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்ட (சந4)த் துறை

அரசாணை (நிலை) எண். 47

நாள் 22.5.2008
திருவள்ளுவர் ஆண்டு 2039
வைசாசி –9.

படிக்கவும்:

ஊனமுற்றோருக்கான மாநிலஆணையரின் கடிதம் ஆர்.ஓ.சி.எண்.0097/கணக்கு 2/ 2007 நாள் 18.12.2007

---

**ஆணை:**

மரபணுக்கள்_பாதிப்பால் தசையை உருக்கி,_உடல் ஊனத்தை ஏற்படுத்தும் உயிர்க் கொல்லி நோயான தசை சிதைவு நோயால் (Muscular Dystrophy) பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகி வருகிறது என்றும், இது தொடர்பான கணக்கெடுப்பில், இந்நோயாளிகள் மாநிலம் முழுவதிலும் சுமார் 2500க்கும் மேலாக உள்ளனர் என்பது தெரிய வருகிறது என்றும், இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடல் தசை முழுவதும் வலுவிழந்து, நாளடைவில் கை, கால் செயலிழந்துவிடும் என்றும், இந்நோயை குணப்படுத்தவோ அல்லது இந்நோய் நாளுக்கு நாள் அதிகமாவதைத் தடுத்து நிறுத்தவோ இன்றைய நிலையில் உலகளவில் மருந்துகள் இல்லை என்றும் ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும் இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களும், மனவளர்ச்சி குன்றியோரைப் போன்றே பிறரை சார்ந்து வாழ வேண்டிய நிலை உள்ளது என்றும், எனவே, இந்நோயாளிகளுக்கும் மனவளர்ச்சி குன்றியோருக்கு வழங்கப்படுவதைப் போன்று மாதம் ரூ.500/– உதவித் தொகை வழங்கினால் அவர்களின் மருத்துவ செலவிற்கும், பராமரிப்பிற்கும் மிகவும் உதவியாக இருக்கும் என்றும், ஆரம்ப கட்டமாக 1000 பேர் பயன் பெறும் வகையில் இத்திட்டத்திற்கு ரூ.60.00 இலட்சம் தேவைப்படுகிறது என்றும் அவர்தெரிவித்துள்ளார்.

பராமரிப்பு படிகள்= ரூ.500 x 12 மாதங்கள் x 1000 பேர் = ரூ 60.00 இலட்சம்
(தொடர் செலவினம்)

தபால் செலவு = ரூ.25.25 x 1000 x 12 மாதங்கள் = ரூ.3.10 இலட்சம்
(தொடர் செலவினம்)

------------

மொத்தம் ரூ.63.10 இலட்சம்

------------

அதன்படி 2008–2009 ஆம் ஆண்டுக்கான பகுதி II திட்டத்தின் கீழ் தசை சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒவ்வொரு மாதம் ரூ.500/– வீதம் 1000 நபர்களுக்கு ரூ.63.10 இலட்சங்கள் செலவினத்திற்கான கருத்துருவினை ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் அனுப்பியுள்ளார்.

2. 2008–2009 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிவிப்பில் அமைச்சர் (நிதி) அவர்கள் உடல் ஊனமுற்றோர் படும் துன்பங்கள் போலவே தசைச் சிதைவு ( Muscular Dystrophy) நோயினால் பாதிக்கப்பட்டுள்ளோரும் கடும் துயரங்களைச் சந்தித்து வருகின்றனர் என்றும் அவர்களுக்கு உதவும் வகையில்

இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளோருக்கும் வரும் நிதியாண்டிலிருந்து கடும் ஊனமுற்றோருக்கு அளிக்கப்படுவது போலவே மாதாந்திர உதவித் தொகையாக ரூபாய் 500 அளிக்கப்படும் என அறிவித்துள்ளார்.

3. ஊனமுற்றோருக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை ஏற்று நிதி நிலையறிக்கையில் அறிவித்துள்ளபடி தசைச் சிதைவு நோயல் பாதிக்கப்பட்டவர்களுக்கு மன வளர்ச்சி குன்றியோருக்கு / கடும் ஊனமுற்றோருக்கு அளிக்கப்படுவது போன்று மாதாந்திர உதவித் தொகையாக பராமரிப்பு உதவித் தொகை ஒரு நபருக்கு ரூ.500/– வீதம் 1000 நபர்களுக்கு வழங்க தபால் செலவு உட்பட ரூ.63.10 இலட்சங்கள் (ரூபாய் அறுபத்து மூன்று இலட்சத்து பத்தாயிரம் மட்டும்) செலவினம் மேற்கொள்ள ஊனமற்றோருக்கான மாநில ஆணையருக்கு அனுமதியளித்தும் நிதி ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் –02–சமூக நலன்–101. உடலுனமுற்றோர் நலன் II
மாநிலத் திட்டம் MI –தசைக் கோளாறு நோயால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு பராமரிப்பு மானியங்கள்
09 உதவித் தொகை –03 குறிப்பிட்டத் திட்டங்களுக்கான மானியங்கள் – ரூ.60.00 இலட்சம்
(து.தொ.கு. 2235–02–101–MI-0939)

05 அலுவலகச் செலவுகள் –04 அலுவலகப் பணி அஞ்சல் வில்லைகள் – ரூ.3.10 இலட்சம்
மற்றும் தபால் செலவுகள்
(து.தொ.கு. 2235–02–101–MI .0545)

-----------------
ரூ.63.10 இலட்சம்
------------------

5. இவ்வாணை நிதித்துறையின் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது. நிதித்துறை அ.சா.எண்.23455/சந/2008 நாள் 17.4.2008

(ஆளுநரின் ஆணைப்படி)

நா.ச.பழனியப்பன்
சிறப்பு ஆணையர் மற்றும் அரசு செயலாளர்.

பெறுநர்
ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர், சென்னை–6
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்(ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட ஊனமுற்றோருக்கான மறுவாழ்வு அலுவலர்கள்
(ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பள கணக்கு அலுவலர் சென்னை 5/9/35
தலைமைக் கணக்காயர், சென்னை 18/35
தலைமைக் கணக்காயர், சென்னை 18/35 (பெயரில்)
நகல்
நிதி (சமூகநலம்)த்துறை, சென்னை 600 009
முதலமைச்சர் அலுவலகம், சென்னை9
அமைச்சர் (சமூக நலம்) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர்
செயலாளர் (சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை) அவர்களின் தனிச் செயலாளர்,
சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை அனைத்துப் பிரிவுகள்
உதிரி /இ.கோ.

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்